
ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

SANGANATHAM
சங்கநாதம்

Jan 2025

39-1



சங்கநாதம் வழியாக புத்தாண்டில் உங்கள் அனைவருடனும் இணைந்துகொள்வதில் மிக மகிழ்ச்சி. சங்கநாதம் எமது மன்றத்தின் பிரதானமான மூன்று நிகழ்வுகளை முன்னிறுத்தி வெளிவருகிறது: மன்றத்தின் 39வது உருவ விழா, தைபொங்கல் விழா, தமிழர் மரபுத்திங்கள் விழா. முதலில் உங்கள் அனைவருக்கும் எனது மனமுவர்ந்த்த புத்தாண்டு, தைபொங்கல் மற்றும் மரபுத்திங்கள் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். 2025ம் ஆண்டில் நீங்கள் அனைவரும் நல்ல சுக நலத்துடனும் மகிழ்வுடனும் வாழ இறை அருளை வேண்டி நிற்கிறேன். இவ்வேளையில் நாம் மகிழ்வுடன் வாழ்வதற்கு எவை காரணிகளாகவுள்ளன என ஆராட்சிகள் கூறுபவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்:

- நன்றியுடமை: நமக்கு உதவி செய்தவர்கு என்றும் நன்றியுடையவர்களாகவிருத்தல். இதை வள்ளுவர் நன்றி மறப்பது நன்றன்று …எனக் கூறுகிறார்.
- ஈதல்: முடிந்தவரை பிறருக்கு உதவி செய்யவேண்டும். ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு எனக் குறள் கூறுகிறது. பகிர்ந்து வழ்வதைவிட மகிழ்ச்சி கொடுப்பது வேறொன்றுமில்லை.
- மனம் விரும்பும் கருமத்தைச் செய்தல்: பிறரின் நிற்பந்தத்திற்கு இசைவாக செயல்படாமல் சுயமாக விரும்பும் விடயங்களைச் செய்தல்.
- உறவுகளுடனும் நண்பர்களுடனும் கொண்டாடுதல்
- என்றும் புன்னகையுடன் இருத்தல்.

மேற்கூறியவற்றிலிருந்து பணம், பதவி, அதிகாரம் ஒருவருக்கு மகிழ்ச்சி கொடுப்பதாக ஆராட்சிகள் கருதவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இந்த ஆராட்சியிலிருந்து எமது மன்ற உறுப்பினர்கள் மகிழ்வுடன் வாழ்கிறார்கள் என்பது எனது நம்பிக்கை.

இவ்வருட த்துக்கான எமது மன்ற ஆக்கபூர்வமான செய்ற்பாடுகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்பட்டு உங்கள் அனைவரின் பங்கேற்புடன் சிறப்புடன் நிறைவேற்றப்பட்டுவருகின்றன: புதிய மேலதிக செயற்பாடுகள் நிர்வாக உறுப்பினர்களினால் பரிசீலனை செய்யப்பட்டு அவை பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.
ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் அதன் 40 வருட விழாவை 2026ல் கொண்டாடவுள்ளது. இந்த மகத்தான நிகழ்வு நம் மன்றின் பெருமையை உலகறிய செய்யவேண்டியது நமது கடமையும் பெருமைக்குரிய விடயமும். ஆகவே, ஊக்கமுடன் ஒன்றிணைவோம்; பாடுவோம் நம் மன்றின் புகழினை.

மனுவல் இயேசுதாசன்--தலைவர்

இதழ் ஆசிரியரின் பார்வையில்!

*வயது என்பது உடலுக்குத் தான் மனதுக்கு அல்ல. மனதை இளமையாக வைத்துக்கொண்டால்*

*மரணம் வரை மகிழ்ச்சியாக வாழலாம்*

என் இனிய உறவுகளுக்கு எனது அன்பான வணக்கங்கள்!

2024 மிக அழகாக, அமைதியாக, பல மறக்க முடியாத மகிழ்வான நிகழ்வுகளுடன் எம்மை விட்டு கடந்து சென்று விட்டது. இனி வரும் புத்தாண்டை இரு கரம் கூப்பி மகிழ்வுடன் வரவேற்போம். இவ்வாண்டு எல்லோருக்கும் இனிய ஆண்டாக அமைய இப் பிரபஞ்சம் துணைபுரியட்டும்.

நாம் கடந்து வந்த ஆண்டின் நாட்களை ஒருமுறை திரும்பிப் பார்த்தால் தெரியும் நம் கண் முன்னே நாம் அனுபவித்த பல விதமான மகிழ்வான கொண்டாட்டங்கள், உல்லாச பயணங்கள், உடலை நல்ல முறையில் பேணிப் பாதுகாபதற்குரிய பல வகை உடற்பயிற்சிகள், பல வண்ண மாலைகள் செய்வதற்குரிய பயிற்சிகள், எமது மூளையை என்றும் இளமையாக வைத்திருக்கும் வகையில் பல games என சொல்லில் அடங்காது. நமது உறுப்பினர்கள் வீட்டில்அடைபட்டு இருக்காது தமது நாட்களை மகிழ்வாக கழிப்பதற்க்கு பல நிகழ்வுகளை STC அமைத்துக் கொடுத்துள்ளது.

இக் கொண்டாட்டங்களின் போது பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் பலர் தங்களுக்கே தெரியாமல் அவர்களிடம் மறைந்திருந்த திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்க்கு ஓர் தளமாக இம் மேடைகள் அமைந்தன. Art and craft வகுப்பு நடத்துவதன் பலன் எமது கலை நிகழ்வுகளின் அலங்கரிப்புக்கள் எமது மன்ற உறுப்பினர்கள் மூலம் செய்யப்படுகின்றது. அவர்களது திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்க்கு ஓர் நல்ல சந்தர்ப்பம். பல உணவுப் பதார்த்தங்களை தயாரித்து எல்லோருடனும் பகிர்ந்தளித்ததன் மூலம் அவர்களது சமையல் திறமையையும், அவர்களது பெரும் தன்மையையும் அறியக்கூடியதாக உள்ளது.

வீட்டில் அடைந்திருந்தால் நாம் ஏணோ தாணோ என்று தான் இருப்போம். இங்கு வருவதன் மூலம் அழகாக நம்மை அலங்கரித்து , வெளியில் நல்ல காற்றை சுவாசிப்பதன் மூலமும் எமது உடலும் உள்ளமும் எம்மை அறியாமலே புத்துணர்வு அடைகின்றது. எமது அங்கத்தவர்கள் ஆடல், பாடல், நாடகம் என தங்களை என்றும் இளமையுடன் பேணிப் பாதுகாத்து வருகிறார்கள். நாம் கூடி மகிழ்வதற்க்கும், கதைகள் பேசி ரசிப்பதற்க்கும் எமக்கு வெள்ளிக் கிழமைகளில் ஓர் விசாலமான இடத்தை அமைத்து தருவதற்க்கு காரணமானவர்களுக்கு நன்றி.

காலமும் உருண்டோடிக் கொண்டிருக்க அதன் ஓட்டத்துடன் நாமும் சேர்ந்து இவ் அமைப்பில் இருப்பதால் நாம் மிக ஆரோக்கியமாக, ஆனந்தமாக நமது காலத்தை கழித்துக் கொண்டு இருக்கிறோம். 2024ல் நாம் நிறையவே சாதித்துள்ளோம். 2025ல் காலடி எடுத்து வைக்கின்றோம். இன்னும் பல நிகழ்வுகளை சிறப்பாக நிகழ்த்துவதற்க்கு நீங்களும் ஓர் ஊன்று கோலாக நின்று ஒத்துழைத்து கை கோர்த்து நடை போட வேண்டும்.

வருடங்கள் ஒவ்வொன்றும் உருண்டோடிப் போகின்றன

நின்று நிதானித்து அவதானிக்க அவகாசமின்றியே

சந்தோஷங்கள் ஏமாற்றங்கள் எதிர்பார்ப்புக்கள் கவலைகள்

எல்லாம் சேர்ந்த கலவையாய் ஒவ்வொரு வருடமும்

உருண்டோட இந்த வருடமும் அப்படியே உருண்டோடி விட்டது

நினைத்ததும் நடந்தது நினைக்காத்தும் நடந்தது

வாழ்ந்து தான் பார்ப்போமே என நினைத்துக் கொண்டு

நம்மையும் நம்மை சுற்றியுள்ள நல்லவர்களையும்

மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வோம்

அன்பு உறவுகளுக்கு இனிய 2025 புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

நன்றி 2024 நீ தந்த அழகான நினைவுகளுக்கும் அனுபவங்களுக்கும்

பாடங்களுக்கும் நன்றி இறுதி நாள் எல்லாவற்றிற்க்கும் நன்றி

மீண்டும் சந்திப்போம் நினைவுகளில் 2024 அன்புடன்




***ரதிமதி சபாநாதன்***

## Important Messages/முக்கிய அறிவித்தல்கள்

### Membership Renewal: Single membership $35

Membership for year 2025 could be done through e-transfer, cheques or visiting the STC office during weekdays between 9.30-3.30pm. E-transfer to be done at seniortamils@gmail.com



If you like to get the quarterly newsletters (Sanganatham) by post, please pay an additional $10 along with your membership. Membership receipts will be sent by email.

2025க்கான வருடாந்த சந்தாப்பணம் குறித்து நினைவூட்ட வேண்டிய தருணமிது. இந்த வருடத்துக்கான சந்தாப்பணத்தை தபால் மூலமோ, வங்கி பரிமாற்றம் மூலமோ (e-transfer) அல்லது வாரநாட்களில் மன்ற அலுவலகத்திலோ செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம். மேலும் சங்கநாதம் காலாண்டு இதழ்களை தபாலில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 10 டொலர்களை மேலதிகமாக செலுத்தி பெற முடியும். அங்கத்துவ பணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

E transfer link: seniortamils@gmail.com






| DAY | ACTIVITY/ZOOM LINK/VENUE | TIME |
|---|---|---|
|   | ❖ **இலக்கியச்சோலை –Dr. Ravi Subramaniam**<br>Join Zoom Meeting<br>https://us02web.zoom.us/j/87283736436?pwd=V2VOTnRDU3A1MkY4VGMweFR0ZzVyQT09<br>Meeting ID: 872 8373 6436 Passcode: 12345<br><br>❖ **Games & Recreation** ------Burrows Hall Community Centre-(1081 Progress Ave-Scarborough) | 7pm -8.30pm<br><br>10.00am-12 noon |
|   | ❖ **Gentle Fitness** ---Chair Yoga with Felecia<br>Join Zoom Meeting<br>https://us02web.zoom.us/j/81516033144?pwd=MFZnVG5wT3JDcVBCK1ZhanZMSitRdz09<br>Meeting ID: 815 1603 3144 Passcode: 12345<br><br>❖ **Beads jewellery making (STC office)**<br><br>❖ **Together in Friendship** (Second Tuesday of the month) | 9.30am—10.30am<br>10.30am—11.30am<br><br>10.30am—12.30pm |
|   | ❖ **'நிலா முற்றம்' –Variety entertainment**<br>Join Zoom Meeting<br>https://us02web.zoom.us/j/88388663597?pwd=dVdITGQ2T1ZQbWpTQUJzZHdZMzR5UT09<br>Meeting ID: 883 8866 3597 Passcode: 12345 | 7pm -8.30pm |
|   | ❖ **Simply Yoga** -Yoga time with Sri Siva<br>Join Zoom Meeting<br>https://us02web.zoom.us/j/89768440726?pwd=UkNIdzhyVlVEUXphYjVVMlJhYitldz09<br>Meeting ID: 897 6844 0726 Passcode: 12345<br><br>❖ **Craft work/Painting** (Last Thursday of the month)----STC office –in person<br><br>❖ **Bridge club: (STC office)**<br><br>❖ **Chess club: (STC office)** | 9.30am—10.30am<br><br>10.30am-12.30pm<br><br>11.00am-1pm<br><br>2.00pm-4.00pm |
|   | **Wellness Program**<br>Burrows Hall Community Centre (1081 Progress Ave-Scarborough) | 9.30am-12 noon |



Wellness Program at Burrows Hall Community Centre

Every Fridays from 9.30am-12.30pm

ஒன்ராறியோ முது தமிழர் மன்ற உறுப்பினர்களுக்கு இலவச சட்ட ஆலோசனையும் பின்வரும் விடயங்களுக்கு இலவச சட்ட சேவையும் பிரபல சட்டத்தரணி திரு மனுவேல் இயேசுதாசன் அவர்களால் வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்:

- Power of Attorney
- Last Will
- Affidavits
- Certify copies.
- Any other matters that require humanitarian assistance.

மேற்கூறப்பட்ட சேவைகள் மாதத்தின் முதல் கிழமை வருகின்ற புதன் கிழமைகளில்காலை 11:மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரை ஒன்ராறியோ முது தமிழர் மன்றஅலுவலகத்தில் நடை பெறும்.

சேவை பெற விரும்புவோர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். முற்பதிவு அவசியம்.
தொடர்புகளுக்கு தொலை பேசி இலக்கம்: 416-496-2897/416-496-8850

**Free Tax Clinic for STC members under Community Volunteer Income Tax Program (CVITP) administered by the CRA**

**இலவச வருமானவரி சேவை -2024 தனிநபர் வருமான வரிபத்திரம் நிரப்புதல்**

**The Free Tax Clinic is an effort by the Senior Tamils' Centre of Ontario and its dedicated volunteers to offer help STC members to file income tax returns.**

All volunteers receive training from Canada Revenue Agency (CRA) through the CVITP program and can offer simplified returns filing only. STC provides Simplified filing services to:

- Single Person……………………….Total annual income of $35,000 or less
- Couples………………………………..Total combined annual income of $45,000 or less
- One Adult with child…………….Total annual income of $37,500 or less
- Each additional dependent…..add $2,500 to above
- Interest income……………………..less than $1,000

We do not assist with returns for:

- Business or self-employed individuals
- Deceased persons
- Individuals with rental income
- Individuals with capital gains (stocks, bonds, annuities)
- Bankruptcy
- Foreign Property

**STC tax clinic will operate by appointment during the week from 1[s] of March until April 30th, 2025.**

**To book an in-person appointment please call the STC office at 416-496-2897**

**பதிவுகளுக்கு மன்ற அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்**

**Bridge and Chess Classes: Day: Thursdays 11am Venue: STC office**

**To register call the STC office at 416-496-2897**









| | |
|---|---|
| 4058 | Visuvalingam Jeganmohan |
| 4059 | Annusuya Jeganmohan |
| 4060 | Farida Krishnan |
| 4061 | Vettivelu Mangaleswaran |
| 4062 | Vijeyakumary Mangaleswaran |
| 4063 | Rachel Peellegoda |
| 4064 | Shan Sathananthan |
| 4065 | Usha Sathananthan |
| 4066 | Vigneswary Amirthalingam |
| 4067 | Rajalingam Kadirgamarajayogan |
| 4068 | Ram Thayalan |
| 4069 | Meena Thayalan |
| 4070 | Nageswararajah Rajkumar |
| 4071 | Bawani Rajkumar |
| 4072 | Paramalingam Sivalingam |
| 4073 | Kanchana Sivalingam |

**The Senior Tamils' Centre deeply regrets to record the name of the following members who passed away in the recent past and condole with his family**

- Mr. T. Ponnambalam Mem 1076 passed away in Dec 2024.
- Mr. Christy Moses Mem 1761 passed away in Nov 2024.
- Mrs. Pathma Santhirasekari, Mem 1076 passed away in Nov 2024.
- Mrs. Grace Lyman, Mem 1061 passed away in Nov 2024.
- Mrs. Stella Seevaratnam, Mem 2094 passed away in Dec 2024.
- Mr. Robert Koil, Mem 681 passed away in Dec 2024.
- Mr. N. Makendrarajah, Mem 1019 passed away in Jan 2025.
- Mr. K. Kamalanathan, Mem 1106 passed away in Dec 2024.
- Mrs. Sellammah Sinnapu, Mem 2900 passed away in Dec 2024.
- Mr. V. Paramanathan, Mem 884 passed away in Oct 2024.
- Mrs. Santha Vallipuram, Mem 1294 passed away in Oct 2024.
- Mrs. Maheswary Thirunavukkarasu, Mem 2061 passed away in Dec 2024.



## தண்ணீர் என்பது யார்?

தண்ணீரை திரவ நிலையில் உள்ள ஒரு பொருளாக மட்டுமே நாம் பார்க்கிறோம், ஆனால் தண்ணீர் ஒரு உயிருள்ள ஆன்மா. தண்ணீரும் நம்மை போலவே பார்க்கும்,கேட்க்கும்,தகவல் பரிமாற்றம் செய்யும். அதைவிட அதற்க்கு உணர்வுகளும் உண்டு. நம் உணர்வுகளுக்கு ஏற்றாற் போல் தண்ணீரின் தன்மையும் மாறுகிறது. நாம் அதற்க்கு நன்றி தெரிவித்தால் பூப் போல உருவம் பெறுகிறது, மகிழ்ச்சியாய் இருந்தால் வைரம் போல ஜொலிக்கிறது, கோப்பப்பட்டால் அதன் வடிவம் உடைந்து சிதறுகிறது.

தண்ணீருடன் நாம் எந்த அளவுக்கு உணர்வுடன் இணைந்து இருக்கிறோம். நம் முன்னோர்கள் தண்ணீரீன் அருமையை உணர்ந்து இருந்தார்கள். அதனால் தான் கோவில்களிலும், கிறிஸ்துவ ஆலயங்களிலும், மசூதியிலும் நீரை தீர்த்தமாகவும், புனித நீராகவும் பயன்படுத்தினர். கடவுளுக்கு நிகராக நீரையும் மதித்தனர். ஆதலால் நீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த நீருடன் இருந்த உணர்வு பூர்வமான இணைப்பு இப்போது முற்றிலும் குறைந்து விட்டது. அதனால்தான் இப்போது நீர் பற்றாக் குறையாக இருக்கிறது.

நீர் பெருக்கெடுத்து ஓட என்ன செய்ய வேண்டும்? நமக்கு ஆசையாய் பரிசளிக்கும் நண்பனுக்கு நன்றி சொல்லாவிட்டால் மறுமுறை பரிசளிக்கும் ஆசை போய்விடாதா? அப்படித்தான் இயற்கையும். இயற்கையின் நியதியும் அதுதான். அதேபோல் இருக்கும் நீருக்கு நன்றி தெரிவிக்காத்தால் தான் நீர் பற்றாக் குறை ஏற்பட்டு இருக்கிறது. இனியும் காலம் கடத்த வேண்டாம். எப்பொழுதெல்லாம் நீரை பயன்படுத்துகிறோமோ அதாவது நீரை அருந்தும் போது, குளிக்கும் போதெல்லாம் நீருக்கு நன்றி சொல்லுங்கள். குடிக்கும் தண்ணீர் கலன்களில் நீருக்கு நன்றி என்று எழுதி வையுங்கள். அதே நம் உணர்வை புரிந்து மற்ற நீருடன் தொடர்பு கொண்டு நீரை வரவழைத்து பற்றாகுறையை தீர்க்கும்.

"வாருங்கள் ஒன்று சேர்ந்து நீருக்கு நன்றி தெரிவிப்போம்"

நம் உடம்பு வந்து நீர் பிராணனை தான் கேட்கிறது. நீங்கள் நினைக்க கூடாது உடம்பு நீரை கேட்கிறது என்று இல்லை நீருக்குள் இருக்கும் பிராண சக்தியைதான்கேட்கிறது. பிராண சக்தி தண்ணீரில் இருப்பதால் தான் நாம் தண்ணீரை குடிக்கின்றோம். நம் உடம்புக்கு தாகம் எடுத்தவுடன் நீர் பிராணனை கொடுக்க வேண்டும். எந்த நீரைக் குடிக்கின்றீர்களோ அந்த நீரில் உயிர் பிராணன் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இல்லாமல் உயிரற்ற நீரைக் குடித்தால் ஒரு பலனும் இல்லை. நிறைய பேர் mineral water ஐ குடிக்கிறீர்களே அது செத்துப் போன தண்ணீர். Mineral water ஐ எடுத்து அதனுள் ஓர் மீனை விட்டீர்கள் என்றால் ஒரு மணி நேரத்தில் செத்து விடும். ஏன் சாகிறது என்றால் அந் நீரில் உயிர் கிடையாது. ஆனால் அந்த மீனை சாக்கடையில் விட்டால் கூட அது சாகாது. ஏனென்றால் அந்த சாக்கடை நீரில் நீர் பிராணன் இருக்கிறது. இப்போ நாம் நகரத்தில் வாழ்வதால் pipe ல் வரும் நீரை தான் குடிக்க வேண்டி உள்ளது. ஆனாலும் அவ் நீரில் அழுக்குகள் உள்ளது. மாசடைந்து உள்ளது. அப்போ அதிலுள்ள அழுக்கையும் எடுக்க வேண்டும், அதே நேரம் நீர் பிராணனும் செத்து விடக் கூடாது. அதற்க்கு என்ன செய்யலாம் என்றால் நீரை தாமிர பாத்திரத்தில் ஊற்றி வைத்து குடிக்க வேண்டும். தாமிர பாத்திரத்தில் ஊற்றி வைக்கும் போது அந்த தண்ணீரில் உள்ள அழுக்குகளை அது எடுத்து விடும். அதற்க்கு அப்படி ஒரு சக்தி உண்டு. நீர் பிராணன் சாகவே சாகாது. நீங்கள் filter பாவித்து நீரை சுத்தம் பண்ணும் போது நீர் சுத்தம் ஆகுது, அதே நேரம் நீர் பிராணனை அது கொன்று விடுகிறது. உயிர் பிராணன் செத்த பிறகு அந்த நீரை குடிப்பதால் என்ன பிரயோசனம். உடம்பு உயிர் பிராணனை தான் கேட்கிறது. உடம்பு நீரிலுள்ள உயிர் பிராணனை எடுத்துக் கொண்டு மிகுதி நீரை சிறுநீராக வெளியே அனுப்புகிறது. இதை தான் உடம்பு செய்கிறது. நீரும் சுத்தமாக வேண்டும், அதே நேரம் நீர் பிராணனும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தாமிர பாத்திரத்தை பயன் படுத்தினார்கள். அது தான் தாமிர பாத்திரத்திற்குரிய மகிமை. இயற்கையான நீர் கரைந்த தாதுக்களை கொண்டுள்ளது.

நீரை நன்றாக கொதிக்க வைத்தும் குடிக்க கூடாது. நன்றாக கொதிக்க வைக்கும் போது அதிலுள்ள தாதுக்கள் அழிக்கப்பட்டு விடும். நீங்கள் வீட்டில் நீர் சுட வைக்கும் பாத்திரத்தை பார்த்தீர்கள் என்றால் அதன் அடியில் வெள்ளையாக படிந்திருப்பதை பார்த்திருப்பீர்கள். அது calcium படிவு. Calcium படிவு கண்ணுக்கு தெரியக் கூடியது, ஏனைய தாதுக்கள் அழிவது கண்ணுக்கு தெரியாது. நீரை சிறிது சுட வைத்து (warm water) ஆக குடிக்கலாம். கங்கை நீர்,குளங்கள்,ஆறு போன்றவற்றின் நீரை எடுத்துக் கொண்டால் அந்த நீரில் பிராணனின் வீரியம் அதிகமாக இருக்கும். தினமும் வீட்டிலுள்ள நீரில் குளிக்கிறீர்கள், ஆனால் குளங்கள், ஆறுகள், நீர் ஊற்றுக்களில் குளித்தீர்கள் என்றால் அப்படியே ஒரு படி மேலே நல்ல சுறு சுறுப்பாக, உற்சாகமாக உணர்வீர்கள். அவ்வளவு சக்தி கிடைக்கும்.நீரைப் பார்த்தால் ஓரே மாதிரி தான் இருக்கும், ஆனால் அதில் ஓடும் மின்சாரம் வித்தியாசப் படுகிறது.

நீர் எமக்கு மிகவும் இன்றி அமையாத்து. நீர் இன்றி எந்த உயிரினத்தாலும் வாழ முடியாது என்பதை உணர்ந்து நீரை பாதுகாப்போம்.

**"நீரின்றி நாம் இல்லை"**

***ரதிமதி சபாநாதன்***

விதி என்பது உங்களுக்கு நீங்களே உருவாக்கிக்கொள்வது. உங்கள் விதியை நீங்களே உருவாக்கத் தவறும்போது அது தலைவிதியாகிறது.

மன அழுத்தம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் விளைவாக ஏற்படுவதில்லை - உங்களை நீங்களே நிர்வகிக்க முடியாததன் விளைவாக ஏற்படுகிறது.



**MEMBERS' CORNER**

## The Colombo Chetties

The identity Colombo Chetties forms an integral part of Sri Lankan society. They are a relatively small community domiciled in the Western, North Western and Southern Provinces, many of them have been assimilated into or identified with the Sinhala and Tamil Communities.

Earliest historical records indicate that Chetties first came to Ceylon just after the arrival of Prince Vijaya. Many Colombo Chetties adopted the name Chetty or Chitty as their family names. They share an antecedent with Allegakones, Candappas, Casinaders, Kadirgamars, Muthukumarus, Sethukavelars, Somanaders, and Tambimuttus.

The modern Chitty family was founded by the wealthy Christian Chitty (d.1899?) and his French Huguenot wife, the beautiful blue-eyed Matilda Augusta Morrel.

To pick a few notables at random from the long and impressive list of Colombo Chetties, there was Dr. Michael Ondaatje (not to be confused with today's famous author of that name who must be one of his descendants). This eminent physician came to Sri Lanka in June 1659 on the recommendation of the Maharajah of Tanjore to attend on the wife of the Dutch Governor Van de Mayden who was stricken with a rare disease that had baffled both Dutch doctors and native ayurvedic physicians. She responded to his treatment and the grateful Governor not only rewarded him with money and jewels, but appointed Dr. Michael Juri Ondaatje the first Doctor of Colombo, the first Colombo Chetty to hold this post. He died in Colombo in 1714.

The late President J.R. Jayawardene's first paternal ancestor was a Colombo Chetty and there is an excerpt from the biography of J.R. authored by Prof. K.M. De Silva & Howard Wriggins, in support of this. Don Adrian Jayawardene, J.R.'s paternal great-grandfather, descended from a Chetty family, but two or three generations earlier, a male of this family had married a Sinhalese by the name of Jayawardene from the village of Welgama near Hanwella and had taken on the name of Jayewardene.

In a community well-known for its Christian (particularly Roman Catholic) links, and for the many priests and nuns it produced, it may be news to some, as it was to me, to learn that the Ven. Soma Thero of Vajirarama Temple, Bambalapitiya, was born Victor Pulle, the son of Colombo Chetty parents. Many illustrious names are mentioned, among them: E.C. Alles, the first Colombo Chetty to obtain the F.R.C.S (England), and one-time President of the Ceylon Medical Association; George Chitty, Q.C., Justice M.F.S. Pulle, Justice Christie Alles, George Candappa, P.C., Chevalier L.A. Perumal, Mano Muthukrishna-Candappa, Managing Director of the Polytechnic.

Shanthakumar Sanmugam (Mem # 4051)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

மன்னராட்சியில் தமிழும், சைவசமயமும் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்ட வேளையில், அன்னியர்கள் இலங்கையைக் கைப்பற்றினர். அப்பொழுது தமிழ் மக்களின் வாழ்விடமாக அமைந்திருந்த வடபகுதியும், அவர்களின் ஆட்சிக்குட்பட்டது. கலாச்சாரம், மதம் ஆகியவற்றை தமிழ் மக்களிடையே வேரூன்ற, பல முயற்சிகளை எடுத்தனர். மூன்றாவதாக இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், தமிழ் மக்களின் சமயம், மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தினர். இவ்வாறான சூழ்நிலையில் விடிவெள்ளியாக தோன்றி, தமிழ், சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களாவார். தமிழ் பிரதேசத்தின் இராசதானியாக விளங்கிய நல்லூரில், 1822 ஆம் ஆண்டு, மார்கழி 18 ஆந் திகதி, இவரது ஜனனம் நிகழ்ந்தது.



கல்வி கற்கும் காலங்களில், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார். அத்தோடு யாழ்ப்பாணத்தில் இருந்த பீற்றர் பேர்சிவல் பாதிரியாரிடம் ஆங்கிலமும் கற்றார். சமஸ்கிருதத்திலும் மேம்பட்டவராக விளங்கினார். நாட்கள் செல்லச் செல்ல நாவலர் மனதில், தமிழும், சமயமும் எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றிய சிந்தனை எழுந்தது. அவர் மனதில் ஆங்கிலேயரின் வழிமுறைகள் சிறுபிள்ளைகளை, அவர்கள்பால் ஈர்ப்பதாகக் காணப்பட்டது. இதனைத்தடுக்க எண்ணிய ஆறுமுகநாவலர், சைவப்பிள்ளைகளை ஒருங்கிணைத்து, திண்ணைப் பள்ளி ஒன்றினை ஆரம்பித்து, சைவத்தையும், தமிழையும் கற்பிக்க ஆரம்பித்தார். அத்துடன் இவர் செய்த பிரசங்கங்கள், மக்களிடையே ஒருவித ஈர்ப்பை ஏற்படுத்தியது.

மதமாற்றம், ஆங்கில ஊடுருவல் ஆகியவற்றைச் செய்வதற்கு ஏதுவாக, அனைத்து வசதிகளும் ஆங்கிலேய மிஷனரிகளிடம் காணப்பட்டது. குறிப்பாக, தமது கருத்துக்களையும், கல்வியையும் மக்களிடம் திணிப்பதற்கு ஏதுவாக, ஆங்கிலேயரிடம் அச்சு இயந்திரவசதி காணப்பட்டது. இதனைக் கருத்தில்கொண்ட நாவலர் அவர்கள், 1948 ஆம் ஆண்டு, வண்ணார்பண்ணையில், சைவப்பிகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். எனினும், மக்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அச்சுயந்திர வசதி அவசியமானது என்பதை உணர்ந்து, 1949 ஆம்ஆண்டு, ஆடிமாதம் சென்னைக்கு பயணமானார். இவர் சைவத்திற்கும், தமிழுக்கும் ஆற்றும் பணியைக் கேள்வியுற்ற திருவாவடுதுறை ஆதீனம், ‘நாவலர்’ என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இதன் பின் சென்னையில் ஓர் அச்சுக்கூடத்தையும், பின்னர், யாழ்ப்பாணத்தில் ஓர் அச்சுக்கூடத்தையும் நிறுவி, பல நூல்களை எழுதி பதிப்பித்தார்.

இவர் எழுதிய நூல்களுள் பாலபாடம், சைவ வினாவிடை ஆகிய இரு நூல்களும் சமய உண்மைகளை அறிய சிறார்களுக்கு பெரிதும் உதவியது. நீதிநூல்கள் பிள்ளைகளைக் கவர்ந்தது. பெரியபுராணவசனம், கந்தப்புராணவசனம், போன்ற பல வசனநூல்களை எழுதிய பெருமை நாவலரையே சாரும். இக்காரணங்களால் இவர் ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். ஆறுமுக நாவலர் அவர்கள் வாழ்ந்த காலமோ ஐம்பத்தியேழு. எழுதிய பதிப்பித்த நூல்களின் எண்ணிக்கையோ ஐம்பத்தியொன்பது. பிரமச்சரிய விரதத்தைக்
கடைப்பிடித்து, தமிழுக்கும், சைவத்திற்கும் அரும்பணியாற்றிய ஆறுமுகநாவலர் அவர்கள், 1879 ஆம் ஆண்டு, கார்த்திகை மாதம், 21 ஆந்திகதி இறைவனடியில் இணைந்தார்.

வசந்தா நடராஜா
அங்கத்துவ இலக்கம் 4033

**சுவாமி விவேகானந்தர் - பொன்மொழிகள்!**

- ✓ நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.
- ✓ எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.
- ✓ தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.
- ✓ உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.
- ✓ உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.
- ✓ உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.
- ✓ செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து; அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.
- ✓ நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்; உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை)

## Deepawali Celebrations-----Nov 2024







## Christmas Celebrations-----Dec 2024

# STC at a glance





**STC Milestone Birthday Celebrations ---20th Nov 2024**

# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்

## SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

Registered Non- Profit Corporation # 923023
3852 Finch Ave. E, Unit 210, Scarborough ON M1T 3T9

Tel: 416-496-2897 /416-496-8850 Email: admin@seniortamilscentre.org

Website: www.seniortamilscentre.com

President
Manuel Jesudasan
647-501-6293

Vice President
Raj Thavaratnasingham
416-522-9972

Secretary
Gnana Sundaraiswaran
647-449-0343

Treasurer
S. Pathmanathan
647-385-3180

Directors

Kumarakulasunderam
Ponnudurai
647-984-8636

Arumugam Senthilvadivel
416-616-6031

Anjuthamalar Jegatheeswaran
416-931-9253

R. Mahendran
647-295-1010

K. Thanabalasingam
647-961-8010

Srirani Rajeswaran
905-209-1473

Editor/Director
Rathimathi Sabanathan
416-755-1853

Executive Director
Vasanthy Shanthakumar
647-238-0503

## Mediterranean - Western Cruise (7 nights) & 1 night stay in Barcelona

**Royal Caribbean --Allure of the Seas-One of biggest ship in the world**

**Date: 12th Sep 2025—21st Sep 2025**

**Cost per person**

- **Inside Cabin (2 in a room) $3050**
- **Inside Balcony (Central Garden or Board Walk view) (2 in a room) $ 3620**
- **Ocean View Balcony $3850**

**What is included?**

- Inside or balcony cabin with double sharing room
- Round trip flight from Toronto, with one stop at most
- One night Barcelona Hotel with breakfast
- Transfer to/from the cruise port
- If we have more than 40 passengers, we will offer half day city tour in Barcelona free of charge. Meals and admissions are extra,

**What is not included?**

- ✓ Tips for the cruise: Estimate USD 20/PERSON, PER NIGHT, based on cruise line requirements
- ✓ Tips for the bus driver EUR 10/person: Waived for STC members once we have 30+ guests
- ✓ Checked luggage for airfare, CAD 200-260/luggage
- ✓ carry-on Luggage CAD 80-120/luggage
- ✓ Meals before and after the cruise, Personal expenses
- ✓ Travel protection insurance and all other items of a personal nature. (Travel, Medical Insurance)



**How to book: Bookings will be accepted with a deposit of $1800 along with your copy of your passport by 19th of Feb 2025. It is non-refundable. The deposit will confirm your reservation.** (Please let us know if you need a wheelchair for your flight.

**Final payment due before May 6, 2025.**

**Cancellation Policy: Payments made are non-refundable**

**Canadian passport/ Medical Insurance is a must**




**SENIOR TAMILS' CENTRE OF ONTARIO**

### MEDITERRANEAN – WESTERN CRUISE

THE WESTERN MEDITERRANEAN IS ONE OF THE MOST ICONIC CRUISING DESTINATIONS IN EUROPE. ENCOMPASSING THE COUNTRIES OF SPAIN, FRANCE AND THE WESTERN COAST OF ITALY, A WESTERN MEDITERRANEAN CRUISE WILL NOT ONLY INTRODUCE ITS GUESTS TO THE MUST-SEE DESTINATIONS AND LANDMARKS OF THE REGION BUT ALSO OFFERS THE CONVENIENCE OF BEING ABLE TO INCORPORATE MULTIPLE COUNTRIES INTO ONE SEAMLESS ITINERARY.

| Date | Location | Arrival | Departure |
|---|---|---|---|
| Fri, Sep 12, 2025 | DEPART FROM TORONTO | FLY TO | BARCELONA |
| Sat, Sep 13, 2025 | ARRIVE IN BARCELONA | HOTEL | FREE TIME |
| Sun, Sep 14, 2025 | BARCELONA EMBARKATION | -- | 5:30 pm |
| Mon, Sep 15, 2025 | PALMA DE MALLORCA, SPAIN | 8:00 am | 4:00 pm |
| Tue, Sep 16, 2025 | PROVENCE(MARSEILLE), FRANCE | 9:00 am | 6:00 pm |
| Wed, Sep 17, 2025 | FLORENCE/PISA(LASPEZIA)ITALY | 8:30 am | 8:00 pm |
| Thu, Sep 18, 2025 | ROME (CIVITAVECCHIA), ITALY | 7:00 am | 7:00 pm |
| Fri, Sep 19, 2025 | NAPLES, ITALY | 7:00 am | 7:00 pm |
| Sat, Sep 20, 2025 | CRUISING | -- | -- |
| Sun, Sep 21, 2025 | BARCELONA, FLY BACK TO TORONTO | 5:00 am | -- |

**Optional Cruise excursions covers all 5 port of calls: Palma (Spain), Provence (France), Florence, Rome and Naples (Italy). The famous sightseeing including Leaning Tower of Pisa, Colosseum, Roman Forum, Palatine Hill, Pompeii and more!**




## TRIP TO ROCHESTER TEMPLE, USA

**Date: 23rd April 2025** **Transport: Coach**

**Amount: $65**

**Last date for registration with full payment: March 14th 2025**